# நெறிமுறைகளின் கோட்பாடு

18 டிசம்பர் 2024 அன்று Saipem SpA இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது



Saipem Classification - General Use

# உள்ளடக்கம்

அத்தியாயம் 8 .......... 4
SAIPEM நெறிமுறைக் கோட்பாடுகள் .......... 4
அறிமுகம் .......... 4
1. பொதுவான கொள்கைகள்: நிலைத்தன்மை மற்றும் பெருநிறுவன பொறுப்பு 5
2. நடத்தைத் தரநிலைகள் மற்றும் பங்குதாரர்களுடன் கூடிய உறவுகள் .......... 7
2.1. நெறிமுறைகள், வெளிப்படைத்தன்மை, நேர்மை, தொழில்முறை .......... 7
2.2. பங்குதாரர்கள் மற்றும் சந்தையுடனான உறவுகள் .......... 8
2.2.1. பங்குதாரர்களுக்கான மதிப்பு, செயல்திறன், வெளிப்படைத்தன்மை.......... 8
2.2.2. பெருநிறுவன ஆளுகைக் கோட்பாடு.......... 9
2.2.3. நிறுவனத் தகவல்கள் .......... 9
2.2.4. முக்கியமான அல்லது உள்நிலைத் தகவல்கள் .......... 9
2.2.5. ஊடகம் .......... 9
2.3. நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் உள்ளூர் சமூகங்களுடனான உறவுகள் .......... 9
2.3.1. அதிகாரிகள் மற்றும் பொது நிறுவனங்கள் .......... 10
2.3.2. அரசியல் அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்கள் .......... 10
2.3.3. உள்ளூர் சமூகங்களின் வளர்ச்சி .......... 10
2.3.4. "இலாப நோக்கற்ற" நடவடிக்கைகளை மேம்படுத்துதல் .......... 11
2.4. வாடிக்கையாளர்கள் மற்றும் வழங்குநர்களுடனான உறவுகள் .......... 11
2.4.1. வாடிக்கையாளர்கள் .......... 11
2.4.2. வழங்குநர்கள் மற்றும் வெளிப்புற கூட்டுப் பணியாளர்கள் .......... 12
2.5. Saipem-ன் மேலாளர்கள், பணியாளர்கள் மற்றும் கூட்டுப் பணியாளர்கள் . 13
2.5.1. மனித வள வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு .......... 13
2.5.2. அறிவு மேலாண்மை .......... 14
2.5.3. நிறுவனப் பாதுகாப்பு .......... 15
2.5.4. பணியிடத்தில் துன்புறுத்தல் அல்லது கொடுமைப்படுத்துதல் .......... 15
2.5.5. ஆல்கஹால் அல்லது போதைப்பொருள் மற்றும் புகைபிடித்தல் தடைகளைத் தவறாகப் பயன்படுத்துதல் .......... 16
3. நெறிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான கருவிகள் .......... 17
*3.1.* அகக் கட்டுப்பாட்டு அமைப்பு .......... 17
3.1.1. நலன் முரண்பாடுகள் .......... 18
3.1.2. கணக்குப் பதிவுகளின் வெளிப்படைத்தன்மை .......... 19
*3.2.* சுகாதாரம், பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் பொதுப் பாதுகாப்பு .......... 20
*3.3.* ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் அறிவுசார் சொத்துரிமைப் பாதுகாப்பு 20
*3.4.* இரகசியத்தன்மை .......... 21
3.4.1. வியாபார இரகசியங்களைப் பாதுகாத்தல் .......... 21
3.4.2. தனியுரிமைப் பாதுகாப்பு .......... 21
3.4.3. சங்கங்களில் மேலாண்மை மற்றும் உறுப்பினராக இருத்தல்,

முன்னெடுப்புகள், நிகழ்வுகள் அல்லது வெளி கூட்டங்களில் பங்கேற்றல் ............. 22
4. நெறிசார் கோட்பாடுகளுக்கான பயன்பாடு மற்றும் ஒப்புநோக்கு அம்சங்களின் எல்லை ........ 23
4.1. கோட்பாட்டினைத் தெரிந்துகொள்ளும் கடமை மற்றும் அதில் ஏதேனும் மீறலிருந்தால் புகாரளித்தல் ........ 23
4.2. ஒப்புநோக்கு கட்டமைப்புகளும் மேற்பார்வையும் ........ 24
4.2.1. கோட்பாட்டு நெறிமுறைகளின் உத்தரவாதி ........ 25
4.2.2. கோட்பாட்டை வளர்த்தெடுத்தல் ........ 26
4.3. நன்னடத்தை மதிப்பாய்வு ........ 26
4.4. கோட்பாட்டின் ஒப்பந்த மதிப்பு ........ 26

## அத்தியாயம் 8

## SAIPEM நெறிமுறைக் கோட்பாடுகள்

## அறிமுகம்

Saipem[1] என்பது அதன் அளவு மற்றும் செயல்பாடுகளின் முக்கியத்துவத்தின் காரணமாக, சந்தையில் மிக முக்கிய பங்காற்றுவதுடன், Saipem மற்றும் அது அமைந்துள்ள சமூகங்களில் பணிபுரிவோரின் பொருளாதார வளர்ச்சி மற்றும் நலனில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ள சர்வதேச அளவில் பரந்துள்ள தொழில்துறை குழுவாகும்.

Saipem செயல்படும் சூழ்நிலைகளின் சிக்கலான தன்மை, நிலையான வளர்ச்சியின் சவால்கள் மற்றும் நிறுவன வணிகத்தில் முறையான ஆர்வமுள்ள அனைவரின் நலன்களையும் ("பங்குதாரர்கள்") கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியம். Saipem தான் ஏற்கும் விழுமியங்களைத் தெளிவாக வரையறுப்பதன் அவசியத்தை வலுப்படுத்துகிறது. அனைவருக்குமான சிறந்த எதிர்காலத்திற்காகப் பங்களிக்கும் பொறுப்புகளையும் ஒப்புக்கொண்டு பகிர்ந்துகொள்கிறது.

இந்த காரணத்திற்காக Saipem நெறிமுறைக் கோட்பாடுகள் ("**கோட்பாடு**" அல்லது "**நெறிமுறைக் கோட்பாடுகள்**") வடிவமைக்கப்பட்டுள்ளது. Saipem-ன் இயக்குநர்கள், சட்டரீதியான தணிக்கையாளர்கள், மேலாளர்கள் மற்றும் பணியாளர்கள் மற்றும் Saipem-ன் குறிக்கோள்களை ("**Saipem பணியாளர்கள்**") அடைவதற்கு இத்தாலி மற்றும் வெளிநாடுகளில் செயல்படும் அனைவருமே தங்கள் சொந்தச் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகளுக்குள் கோட்பாட்டைப் பின்பற்றுவது மிக முக்கியமானது. Saipem உடனான உறவை நிர்வகிக்கும் சட்ட மற்றும் ஒப்பந்த விதிகளுக்கு இணங்க Saipem-ன் செயல்திறன், நம்பகத்தன்மை மற்றும் நற்பெயர் ஆகியவற்றிற்காக, இவை அனைத்தும் அதன் வெற்றி மற்றும் Saipem செயல்படும் சமூகச் சூழலை மேம்படுத்தவும் முக்கியக் காரணிகளாகும்.

Saipem பணியாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களிடையே கோட்பாடு குறித்த புரிதலை Saipem ஊக்குவிக்கிறது. கோட்பாட்டின் கொள்கைகள் மற்றும் உள்ளடக்கங்களுக்கு அவர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பை ஏற்றுக்கொள்கிறது. கோட்பாட்டை உறுதிப்படுத்தும் அல்லது ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் கூடிய எந்தவொரு பங்குதாரரின் ஆலோசனையையும் கருத்தையும் Saipem கருத்தில் கொள்ளும்.

தகவல், தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நோக்கங்களுக்காகப் பொருத்தமான கருவிகள் மற்றும் ஒழுங்குமுறை ஆவணங்களை[2] வழங்குவதற்கும், அனைத்துப்

[1] "Saipem" என்றால் இத்தாலி மற்றும் வெளிநாடுகளில் உள்ள Saipem SpA மற்றும் அதன் நேரடி மற்றும் மறைமுகத் துணை நிறுவனங்களைக் குறிக்கும்.

[2] "ஒழுங்குமுறை ஆவணங்கள்" என்பவை சீரான நடத்தையை உறுதிசெய்யும் நோக்கத்துடனும், அதேபோல இணக்க நோக்கங்களை நாடுதல், ஒழுங்குமுறைப்படுத்திய நடைமுறைகளில் அடங்கிய வேலைகள் மற்றும்/அல்லது நிறுவன அமைப்புகளின் பொறுப்புகளை விவரித்தல், மேலாண்மை மற்றும் கட்டுப்பாட்டு நடைமுறைகள் மற்றும் தகவல் ஓட்டங்கள் ஆகிய நோக்கங்களுடன் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் நிறுவன நலனின் குறிப்பிட்ட பிரச்சினைகள்/அம்சங்கள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தும் ஆவணங்களாகும்.

பரிவர்த்தனைகள் மற்றும் நடத்தைகளிலும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கும், தேவைகேற்ப சரியான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் Saipem கோட்பாட்டின் இணக்கத்தைக் கவனமாகக் கண்காணிக்கிறது. ஒவ்வொரு Saipem நிறுவனத்தின் இணக்கக் குழு அல்லது அதற்கிணையான உறுப்பு கோட்பாட்டு நெறிமுறைகளுக்கு உத்தரவாதியின் செயல்பாடுகளைச் செய்கிறது (“**உத்தரவாதி**”).

Saipem நிறுவனத்துடன் வணிக உறவு கொண்ட அவனைவருக்கும் இந்தக் கோட்பாடுகள் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது.

## 1. பொதுவான கொள்கைகள்: நிலைத்தன்மை மற்றும் பெருநிறுவன பொறுப்பு

சட்டங்கள், ஒழுங்குமுறைகள், சட்டரீதியான விதிகள், நிர்வாகக் குறியீடுகள், நெறிமுறை ஒருமைப்பாடு மற்றும் நேர்மை ஆகியவற்றுடன் இணங்குதல் என்பது அனைத்து Saipem பணியாளர்களின் நிலையான அர்ப்பணிப்பும் கடமையுமாகும். Saipem-ன் முழு அமைப்பின் நடத்தையையும் இது வகைப்படுத்துகிறது.

Saipem-ன் வணிக மற்றும் நிறுவன நடவடிக்கைகள் வெளிப்படையான, நேர்மையான மற்றும் நியாயமான வழியில், நல்ல நம்பிக்கையுடன், போட்டி விதிகளுக்கு முழு இணக்கமாக மேற்கொள்ளப்படும்.

Seipem இயங்குவதில் உள்ள சிக்கலான சூழ்நிலைகளையும், நீடித்த வளர்ச்சியில் எதிர்கொள்ளும் சவால்களையும் கையாளுவதற்கு Saipem சிறந்த சர்வதேச நடைமுறைத் தரநிலைகளுக்கேற்ற ஓர் ஆளுகை அமைப்பைப் பராமரித்து வலுப்படுத்தும்.

நீடித்து நிலைத்தலிலும் பெருநிறுவனப் பொறுப்புடைமையிலும் விவாதங்களை ஆதரித்து பங்குதாரர்களை ஈடுபடச்செய்யும் முறையான வழிகள் பின்பற்றப்படுகின்றன.

ஒரு சர்வதேச நிறுவனம் மற்றும் அதன் கூட்டாளர்களுடன் கூடிய நிறுவனமாக அதன் இரண்டு செயல்பாடுகளையும் நடத்துவதில், மனித உரிமைகள், மனிதர்களின் கட்டுப்பாடற்ற மற்றும் அடிப்படை உரிமைகள் மற்றும் சமத்துவம், ஒற்றுமை, நிராகரிப்பு ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் நிறுவப்பட்ட சமூகங்களை நிறுவுவதற்கான அடிப்படையையும், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் Saipem பணிபுரிகிறது. சமத்துவம், ஒற்றுமை, போர் நிராகரிப்பு, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள், சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார உரிமைகள் போன்றவை மூன்றாம் தலைமுறை உரிமைகள் என அழைக்கப்படுகின்றன (சுயநிர்ணய உரிமை, அமைதிக்கான உரிமை, வளர்ச்சிக்கான உரிமை மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்).

Saipem எந்தவகையிலும் மனித உரிமை மீறல்களுக்கு, பண மோசடி போன்ற பிற சட்டவிரோத நடவடிக்களுக்கு, எந்த வகையான தீவிரவாத நிதியளிப்புக்குச் சாதகமாக அல்லது சகித்துக் கொள்ளும் வகையில் அதன் நடத்தை இருக்கக்கூடாது என்பதையும் தனது நடத்தை வாயிலாக இந்த விசயத்தில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் இயற்றப்பட்ட சட்டங்களில் அமைக்கப்பட்ட கட்டுப்பாட்டுகளுக்கும்

வரம்புகளுக்கும் முழுமையாக இணங்கி நடப்பதற்கு உத்தரவாதமளிக்கும் என்பதை நம்புகிறது.

எந்த விதமான பாகுபாடு, ஊழல், கட்டாயப் பணி அல்லது குழந்தைத் தொழிலாளர் போன்றவை மேற்கொள்ளப்படுவதில்லை. தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் தொழிற்சங்கங்களுக்கான சுதந்திரம், சுகாதாரம், பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் பன்முகத்தன்மை, ஆகியற்றிலும், வெளிப்படைத்தன்மை தொடர்பானவற்றில் விழுமியங்களின் தொகுப்புகள் மற்றும் கொள்கைகள், ஆற்றல் திறன் மற்றும் நீடித்த வளர்ச்சி ஆகியவற்றிலும் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் மரபுநெறிகளுக்கேற்ப கண்ணியம், சுதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றை ஏற்று பாதுகாப்பதில் குறிப்பாகக் கவனம் செலுத்தப்படுகிறது.

இது சம்பந்தமாக, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தின் சர்வதேச விதிகள் மற்றும் பின்வரும் மரபுகளுக்கு இணங்க Saipem செயல்படுகிறது:

- ஐரோப்பியச் சமூகங்களின் நிதி நலன்களைப் பாதுகாப்பதற்கான மரபுநெறிகள் (பிரஸ்ஸல்ஸ், 26 ஜூலை 1995) மற்றும் அது தொடர்பான முதல் நெறிமுறை (டப்ளின், 27 செப்டம்பர் 1996);
- ஐரோப்பியச் சமூக அதிகாரிகள் அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளின் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட ஊழலுக்கு எதிரான போராட்டத்தின் மரபுநெறி (பிரஸ்ஸல்ஸ், 26 மே 1997);
- சர்வதேச வர்த்தகப் பரிவர்த்தனைகளில் வெளிநாட்டு பொது அதிகாரிகளின் லஞ்சத்தை எதிர்ப்பதற்கான OECD மரபுநெறி (பாரிஸ், 17 டிசம்பர் 1997);
- ஐ.எல்.ஓ-சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அடிப்படை மரபுநெறிகள் (18 ஜூன் 1998)
- பன்னாட்டு நிறுவனங்களின் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான (OECD) நிறுவன வழிகாட்டுதல்கள்.

கார்ப்பரேட் குற்றங்களுக்கு எதிரான போராட்டத்தின் முன்னணியில் மிகவும் மேம்பட்ட தேசியச் சட்டத்தின் விதிகள் மற்றும் குறிப்பாக, சட்ட விதிகளாகக் கருதப்படும் மற்றும்/அல்லது குறிப்பிடப்படும் கட்டுப்பாடுகள் மற்றும் இயங்குதள வழிமுறைகள் ஆகியவற்றை Saipem கருத்தில் கொள்கிறது. பின்வரும் எடுத்துக்காட்டுகளுடன் சேர்த்து:

அனைத்து Saipem பணியாளர்களும், எந்தவொரு வேறுபாடும் அல்லது விதிவிலக்குமின்றி, அவர்களின் செயல்பாடுகள் மற்றும் பணிகளின் சூழலில் அவர்களின் செயல்கள் மற்றும் நடத்தைகளில் கோட்பாட்டின் உள்ளடக்கங்களையும் மதிக்க வேண்டும். கோட்பாட்டிற்கு இணங்குதல் அவர்களின் பணி மற்றும் தொழில்முறை செயல்திறனுக்கு அடிப்படையான ஒன்று என்பதை அறிந்து கொள்ள வேண்டும். Saipem பணியாளர்களிடையே உள்ள உறவுகள், எல்லா நிலைகளிலும், நேர்மை, நியாயம், ஒத்துழைப்பு, விசுவாசம் மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றால் வகைப்படுத்தப்படும்.

கோட்பாடுகளின் உள்ளடக்கங்களுடனும் கொள்கைகளுடனும் முரண்படும் எந்தவித நடத்தைகளும் Saipem-க்கு சாதகமாக அல்லது ஆதாயம் தரும்படி செயல்படுவதான நம்பிக்கையை ஒருபோதும் - ஒரு சிறு அளவு கூட -

நியாயப்படுத்த முடியாது.

## 2. நடத்தைத் தரநிலைகள் மற்றும் பங்குதாரர்களுடன் கூடிய உறவுகள்

### 2.1. <u>நெறிமுறைகள், வெளிப்படைத்தன்மை, நேர்மை, தொழில்முறை</u>

அதன் வணிக உறவுகளில், எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும், விசுவாசம், நேர்மை, வெளிப்படைத்தன்மை கொள்கைகள், செயல்திறன் மற்றும் சந்தையில் திறந்த நிலை ஆகிய கொள்கைகளுக்கு Saipem ஆர்வம் கொண்டுள்ளது மற்றும் அவற்றிற்கு இணங்குகிறது.

மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கை, பரிவர்த்தனை மற்றும் பேச்சுவார்த்தை ஆனாலும் பொதுவாக, தங்கள் கடமைகளைச் செய்வதில் Saipem ஆட்களது நடத்தையானது நியாயம், நிறைவு, தகவல் வெளிப்படைத்தன்மை, சட்டத்துக்கு உட்படுதல் போன்றவற்றால் அதன் வடிவத்திலும் உட்பொருளிலும் அதேபோல் தெளிவிலும் உண்மைத்தன்மையிலும் அதன் அனைத்து கணக்குப் பதிவுகளிலும், அமலிலுள்ள பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு உட்பட்டும் ஒழுங்குமுறை ஆவணங்களுக்கு ஏற்பவும் மிக உயர்ந்த கொள்கைகளால் உத்வேகம் பெற்றுள்ளது.

Saipem-ன் அனைத்துச் செயல்பாடுகளும் மிகுந்த கவனத்துடனும், தொழில்முறை திறமையுடனும், ஒதுக்கப்பட்ட பணிகளுக்குப் பொருத்தமான திறன்களையும் நிபுணத்துவத்தையும் வழங்க வேண்டிய கடமையுடன் செய்யப்படும். மேலும் Saipem அமைப்பையும் நற்பெயரையும் பாதுகாக்கும் வகையில் செயல்பட வேண்டும். நிறுவனத்தின் நோக்கங்கள், அத்துடன் திட்டங்கள், முதலீடுகள் மற்றும் செயல்களின் முன்மொழிவு மற்றும் செயல்படுத்தல் ஆகியவை நிறுவனத்தின் சொத்துக்கள், மேலாண்மை, தொழில்நுட்ப மற்றும் தகவல் நிலையை நீண்ட காலத்திற்கு மேம்படுத்துவதையும், அனைத்துப் பங்குதாரர்களுக்கும் மதிப்பு மற்றும் நலனை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டதாக இருக்கும்.

நேரடியாகவோ அல்லது மூன்றாம் தரப்பினரிடமோ லஞ்சம், சட்டவிரோத உதவிகள், கூட்டு, தனக்கு அல்லது மற்றவர்களுக்குத் தனிப்பட்ட அல்லது தொழில் நலன்களுக்கான கோரிக்கைகள் போன்ற செயல்கள் எவ்வித விதிவிலக்கு இல்லாமல் தடைசெய்யப்பட்டுள்ளன.

அரசு பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் மற்றும் அரசு ஊழியர்கள் அல்லது தனியார் ஊழியர்கள், தங்கள் அலுவலகத்தின் நடவடிக்கைகளில் ஆதிக்கம் செலுத்துவதற்கோ அல்லது ஊதியம் பெறுவதற்கோ, மூன்றாம் தரப்பினருக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பணம் அல்லது பொருள் நன்மைகள் மற்றும் பிற நன்மைகள் வழங்குவது தடைசெய்யப்பட்டுள்ளது.

சிறிய பரிசு அல்லது விருந்தோம்பல் போன்ற வணிக மரியாதை, அதன் மதிப்புச் சிறியதாக இருக்கும்போது மற்றும் இரு தரப்பினரின் ஒருமைப்பாட்டையும் நற்பெயரையும் சமரசம் செய்யாதபோதும், பாகுபாடில்லாத பார்வையாளரால் தேவையற்ற நன்மைகளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டதாக அமைக்க முடியாத பட்சத்திலும் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும், இந்த வகை செலவு எப்போதும் ஒழுங்குமுறை ஆவணங்களால்



Saipem Classification - General Use

அடையாளம் காணப்பட்ட நிலையில் உள்ள நபரால் அங்கீகரிக்கப்பட்டு ஒழுங்காக ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

Saipem உடன் வணிக உறவு வைத்திருக்க அல்லது திட்டமிட்டுள்ள தனிநபர்கள் அல்லது நிறுவனங்களின் ரொக்கப் பரிசுகள் ஏற்கப்படாது. சிறிய மதிப்பிலான வணிக மரியாதை என்று கருத முடியாத பரிசுகள் அல்லது சிறப்பு உபச்சாரம் அல்லது விருந்தோம்பல் அல்லது மூன்றாம் தரப்பினரின் கோரிக்கைகள் ஆகியவற்றைப் பெறும் எவரும், அவற்றை மறுத்து, உடனடியாக அவர்களின் நேரடி மேலதிகாரியையோ அல்லது அவர்கள் சேர்ந்த அமைப்பையோ, அது குறித்துத் தொடர்புகொள்ள வேண்டும். அதே போல் உத்தரவாதம் அளிப்பவரிடமும் தெரிவிக்க வேண்டும்.

கோட்பாட்டில் வழங்கப்பட்ட அர்ப்பணிப்பு மற்றும் கடமைகள் குறித்து அனைத்து மூன்றாம் தரப்பினருக்கும் Saipem சரியாகத் தெரிவிக்கும். மூன்றாம் தரப்பினர் தங்கள் செயல்பாடுகளுடன் தொடர்புடைய கொள்கைகளை மதிக்க வேண்டும் மற்றும் சரியான உள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விஷயம் அதன் சொந்த இணக்கத்திற்குள் இருந்தால், மூன்றாம் தரப்பினர் விதிகளைப் பின்பற்றத் தவறினால் வெளிப்புற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 2.2. <u>பங்குதாரர்கள் மற்றும் சந்தையுடனான உறவுகள்</u>

### 2.2.1. பங்குதாரர்களுக்கான மதிப்பு, செயல்திறன், வெளிப்படைத்தன்மை

Saipem-ன் உள் கட்டமைப்பு மற்றும் அதன் நடவடிக்கைகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்கேற்கும் கட்சிகளுடனான உறவுகள் மேலாண்மை நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் நிர்வகிக்கப்படுகின்றன. நிர்வாகத்தின் அதிகாரங்களுக்கும் பங்குதாரர்களின் நலன்களுக்கும் குறிப்பாக மற்ற பங்குதாரர்களின் நலன்களுக்கும் இடையே ஒரு நியாயமான சமநிலையை உறுதிப்படுத்துகின்றன. மேலாண்மை முடிவுகள் மற்றும் பொது நிறுவன நிகழ்வுகளின் சந்தை மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் அறிவை உறுதிப்படுத்துதல், அவை வழங்கப்பட்ட நிதி முறையாவணங்களில் சந்தை மதிப்பில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

பங்குதாரர்களுக்கான மதிப்பை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட முன்முயற்சிகளின் கட்டமைப்பிற்குள் மற்றும் நிர்வாகச் செயல்பாட்டின் வெளிப்படைத்தன்மைக்கு உத்தரவாதம் அளிப்பதன் மூலம், Saipem அதன் உள் நிறுவன அமைப்பு மற்றும் பங்குதாரர்களுடனான உறவுகள் மற்றும் மூன்றாவது ஒருங்கிணைந்த மற்றும் ஒரேவிதமான நடத்தை விதிகளை வரையறுத்து, செயல்படுத்தவும் படிப்படியாகச் சரிப்படுத்தவும் செய்கிறது. பங்குதார்களின் நம்பிக்கை என்பது தரப்பினர்கள், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் மிக உயர்ந்தக் கார்ப்பரேட் நிர்வாகத் தரங்களுக்கு இணங்க, திறமையான மற்றும் பயனுள்ள செயல்பாட்டு விதிகளைத் தானே ஏற்படுத்திக் கொள்ளும் திறன், நம்பகத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை மற்றும் அதன் நற்பெயரை வலுப்படுத்துவதற்கான ஒரு அடிப்படை கருவியாகும்.

பங்குதாரர்கள் தங்கள் திறமைக்குள்ளான முடிவுகளில் பங்கேற்பதும், தகவலறிந்த

தேர்வுகளை மேற்கொள்ளவதும் அவசியம் என்று Saipem கருதுகிறது. ஆகையால், பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்கான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க, நிறுவனத்தின் வலைத்தளத்தைப் பயன்படுத்தி, மற்றவற்றுடன், மிகப் பெரிய வெளிப்படைத்தன்மை மற்றும் நேரத்துடன் - பங்குதாரர்களுக்கும் சந்தையுக்கும் தகவல் வெளிப்படுத்தப்படுவதை Saipem உறுதி செய்கிறது.

பங்குதாரர்கள் அவ்வாறு மேற்கொள்ள உரிமை கிடைக்கும்போதெல்லாம் அவர்களுக்கு வழங்கப்படும் முறையான வழிமுறைகளையும் Saipem சரியான முறையில் கருத்தில் கொள்கிறது.

### 2.2.2. பெருநிறுவன ஆளுகைக் கோட்பாடு

போர்சா இத்தாலியானா வழங்கிய பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்கான சுய ஒழுங்குமுறைக் கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள, Saipem-ன் முக்கியக் கார்ப்பரேட் ஆளுகை விதிகளை Saipem SpA கடைபிடிக்கிறது.

### 2.2.3. நிறுவனத் தகவல்கள்

உள் மேலாண்மை மற்றும் வெளிப்புற தகவல்தொடர்புக்குப் பொருத்தமான நடைமுறைகள் மூலம் நிறுவனத்தின் தகவல்களைச் சரியான முறையில் நிர்வகிப்பதை Saipem உறுதி செய்கிறது.

### 2.2.4. முக்கியமான அல்லது உள்நிலைத் தகவல்கள்

அனைத்து Saipem பணியாளர்களும் தங்கள் பணிகளைச் செய்யும்போது, முக்கியமான அல்லது உள்நிலைத் தகவல்களைச் சரியாகக் கையாளவும், சந்தை முறைகேடு குறித்த ஒழுங்குமுறை ஆவணங்களை அறிந்து அதற்கிணங்கி நடக்கவும் வேண்டும். உள் வர்த்தகம் மற்றும் உள் வர்த்தகத்தை ஊக்குவிக்கும் எந்தவொரு நடத்தையும் வெளிப்படையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும், Saipem பங்குகள் அல்லது Saipem-க்கு வெளியே உள்ள நிறுவனங்களின் பங்குகளை வாங்குவது அல்லது விற்பது எப்போதும் முழுமையான மற்றும் வெளிப்படையான நேர்மையின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

### 2.2.5. ஊடகம்

Saipem உண்மையான, உடனடி, வெளிப்படையான மற்றும் துல்லியமான தகவல்களை வெளியில் வழங்கும்.

ஊடகங்களுடனான உறவுகள் பிரத்தியேகமாக அவ்வாறு செய்ய நியமிக்கப்பட்ட துறைகள் மற்றும் மேலாளர்களால் கையாளப்படுகின்றன; ஊடகப் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தகவல்கள் மற்றும் அத்தகைய தகவல்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து Saipem பணியாளர்களும் முன்கூட்டியே தொடர்புடைய Saipem கட்டமைப்போடு உடன்படுவார்கள்.

## 2.3. <u>நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் உள்ளூர் சமூகங்களுடனான</u>

## உறவுகள்

Saipem நிறுவனங்களுடனும், அது செயல்படும் அனைத்து நாடுகளிலும் சிவில் சமூகத்தின் ஒழுங்கமைக்கப்பட்ட சங்கங்களுடனான உரையாடலை ஊக்குவிக்கிறது.

### 2.3.1. அதிகாரிகள் மற்றும் பொது நிறுவனங்கள்

Saipem, அதன் பணியாளர்கள் மூலம், அதிகாரிகளுடன் தீவிரமாகவும் முழுமையாகவும் ஒத்துழைக்கிறது.

Saipem பணியாளர்களும், Saipem-க்கு ஏதாவதொரு வகையில் ஒத்துழைப்பு வழங்கும் வெளிப்புற ஒத்துழைப்பாளர்களும், நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் கண்டுபிடிக்கக்கூடிய தன்மை ஆகியவற்றால் வகைப்படுத்தப்படும் பொது நிர்வாகத்திற்கு இணங்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை ஆவணங்களுக்கு இணங்க, இந்த உறவுகள் தொடர்புடைய செயல்பாடுகள் மற்றும் நிலைகளால் பிரத்தியேகமாகக் கையாளப்படும்.

சம்பந்தப்பட்ட துணை நிறுவனங்களின் செயல்பாடுகள், ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய முன்முயற்சிகளின் தரத்தை மதிப்பீடு செய்வதற்கும், இந்தச் செயல்களைப் பகிர்வது, செயல்படுத்துதல் மற்றும் கண்காணிப்பதற்கும் தொடர்புடைய Saipem கட்டமைப்போடு ஒருங்கிணைக்கப்படும்.

அதிகாரிகளுக்குத் தவறான அறிக்கைகளை வெளியிடுவது, தூண்டுவது அல்லது ஊக்குவிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

### 2.3.2. அரசியல் அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்கள்

அரசியல் கட்சிகள், இயக்கங்கள், குழுக்கள், அரசியல் அமைப்புகள் அல்லது அவற்றின் பிரதிநிதிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு Saipem எந்த வடிவத்திலும் நேரடி அல்லது மறைமுகப் பங்களிப்புகளை வழங்குவதில்லை. தொழிற்சங்கங்களுக்கும் அவற்றின் பிரதிநிதிகளுக்கும் நேரடி அல்லது மறைமுகப் பங்களிப்புகள் வழங்கப்படலாம். இது கட்டாயச் சட்டமன்ற தேவைகள் அல்லது பொருந்தக்கூடிய கூட்டுத் தொழிலாளர் ஒப்பந்தங்களின்படி வழங்கப்படுகிறது[3].

### 2.3.3. உள்ளூர் சமூகங்களின் வளர்ச்சி

நியாயமான வணிக நடைமுறைகளுடன் இணக்கமான தரங்களின்படி அதன் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், Saipem செயல்படும் சமூகங்களின் சமூக-பொருளாதார மேம்பாட்டிற்கும், அவர்களின் மனித வளங்கள் மற்றும் திறன்களின் மேம்பாட்டிற்கும் தீவிரமாகப் பங்களிக்க Saipem உறுதிபூண்டுள்ளது.

Saipem-ன் நடவடிக்கைகள் அதன் அனைத்துப் பங்குதாரர்களிடமும், சிவில் சமூகத்துடன் உரையாடல் மற்றும் தொடர்பு கொள்ளும் திறன் நிறுவனத்திற்கு

---

[3] சர்வதேச கடல் வர்த்தகச் சங்கங்களுக்கு ஆதரவான சாத்தியமான பங்களிப்புகள் *மக்கள் தலைவர், HSEQ மற்றும் நிலைத்தன்மை அதிகாரியின்*வெளிப்படையான ஒப்புதலைப் பெறவேண்டும்.



Saipem Classification - General Use

முக்கியமான ஒன்றாகும் என்ற நம்பிக்கையில், குறிப்பாக நிறுவனம் செயல்படும் உள்ளூர் சமூகங்களிடமும் உள்ள சமூகப் பொறுப்பு பற்றிய விழிப்புணர்வில் மேற்கொள்ளப்படுகின்றன. Saipem நிறுவனம் இயங்கும் உள்ளூர் சமூகங்களின் கலாச்சார, பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை மதிக்கிறது. முடிந்தவரை பங்களிப்பும் செய்கிறது. குறிப்பாகப் போதுமான ஊட்டச்சத்து, குடிநீர், சரியான உடல் நிலை மற்றும் மனநலம், ஒழுக்கமான குடியிருப்புகள், கல்வி ஆகியற்றை வழங்க முற்படுவதுடன் அத்தகைய உரிமைகளைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் அல்லது தடுக்கக்கூடிய செயல்களைத் தவிர்கிறது.

குறிப்பாக உள்ளூர் சமூகங்கள் மிகவும் ஆர்வம் காட்டக்கூடிய விசயங்களில் தகவல்களைக் கையாள்வதில் வெளிப்படைத்தன்மையை Saipem ஊக்குவிக்கிறது. நிறுவன நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் கருத்தில் கொள்வதிலும், அதேபோல அத்தகு நடவடிக்கைகளிலிருந்து பெறப்படும் இலாபங்களை முறையாக மறுவிநியோகம் செய்வதை ஊக்குவிப்பதிலும் உள்ளூர் சமூகங்களின் சட்டப்பூர்வ எதிர்பார்ப்புகளைக் கவனத்தில் கொள்வதற்காக சம்பந்தப்பட்ட Saipem கட்டமைப்புகள் வாயிலாக தொடர்ச்சியான தகவலை அளித்து ஆலோசிக்கும் வடிவங்களும் ஊக்குவிக்கப்படுகின்றன.

எனவே, Saipem அமைப்பின் ஒவ்வொரு நிலையிலும், உள்ளூர் சமூகங்களின் கலாச்சாரம், நிறுவனங்கள், உறவுகள் மற்றும் வாழ்க்கை முறைகளுடன் பொருத்தமான ஒழுங்குமுறை ஆவணங்களை நிறுவுவதன் மூலமும், உள்ளூர் சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதன் மூலமும் அதன் நிறுவன மதிப்புகள் மற்றும் கொள்கைகளின் தகவலை மேம்படுத்துகிறது.

அந்தந்த பொறுப்புகளின் கட்டமைப்பிற்குள், Saipem பணியாளர்கள் Saipem–ன் கொள்கைகள் மற்றும் தலையீட்டுத் திட்டங்களுக்கு இணங்கத் தனிப்பட்ட முன்முயற்சிகளை உருவாக்குவதில் பங்கேற்பார்கள். முழுமையான வெளிப்படைத்தன்மையின் அளவுகோல்களின்படி அவற்றைச் செயல்படுத்துவார்கள். மேலும் Saipem நோக்கங்களின் ஒருங்கிணைந்த பகுதியாக அவற்றை ஆதரிப்பார்கள்.

### 2.3.4. "இலாப நோக்கற்ற" நடவடிக்கைகளை மேம்படுத்துதல்

Saipem-ன் மனிதநேயச் செயல்பாடு அதன் நோக்கத்திற்கு ஏற்ப அமைந்துள்ளது மற்றும் நிலையான வளர்ச்சியில் கவனம் செலுத்துகிறது.

ஆகையால், Saipem அதன் பணியாளர்களிடையே அதன் “இலாப நோக்கற்ற” நடவடிக்கைகளை வளர்ப்பது, ஆதரிப்பது மற்றும் ஊக்குவிப்பது, நிறுவனம் செயல்படும் சமூகங்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் நிறுவனத்தின் பங்களிப்பை நிரூபிக்கிறது.

## 2.4. <u>வாடிக்கையாளர்கள் மற்றும் வழங்குநர்களுடனான உறவுகள்</u>

### 2.4.1. வாடிக்கையாளர்கள்

நியாயமான போட்டியைப் பாதுகாக்கும் விதிகளை மதித்து, போட்டி நிலைமைகளின்

கீழ் தரமான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் Saipem சந்தைகளில் தனது வணிக வெற்றியைப் பெறுகிறது.

வாடிக்கையாளர்களின் ஆரோக்கியம் மற்றும் உடல்நல ஒருமைப்பாட்டிற்குத் தீங்கு விளைவிக்கும் பொருட்களைப் பெறாமல், அவர்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் குறித்த முழுமையான தகவல்களைப் பெறுவதற்கான உரிமையை Saipem மதிக்கும்.

பொருட்கள் அல்லது சேவைகளைக் கோருபவர்களின் மரியாதை வணிகத்தில் வெற்றிபெற முதன்மை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை Saipem ஒப்புக்கொள்கிறது. வணிகக் கொள்கைகள் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம், பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கைக் கொள்கையுடன் இணங்குவதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன. எனவே, Saipem பணியாளர்கள்:

- வாடிக்கையாளர்களுடனான உறவுகளை நிர்வகிப்பது தொடர்பான ஒழுங்குமுறை ஆவணங்களுடன் இணங்குகிறார்கள்;
- ஒப்பந்த நிபந்தனைகள், உயர்தர பொருட்கள் மற்றும் சேவைகள் வாடிக்கையாளர்களின் நியாயமான எதிர்பார்ப்புகளையும் தேவைகளையும் பூர்த்திசெய்யும் வரம்புகளுக்குள், செயல்திறன் மற்றும் மரியாதையை வழங்கிறார்கள்;
- பொருட்கள் மற்றும் சேவைகள் குறித்த துல்லியமான மற்றும் முழுமையான தகவல்களை வழங்குதல் மற்றும் விளம்பரங்கள் அல்லது பிற வகையான தகவல்தொடர்புகளில் உண்மையாக இருத்தல், இதனால் வாடிக்கையாளர்கள் தகவலறிந்த முடிவுகளை எடுக்க முடியும்.

### 2.4.2. வழங்குநர்கள் மற்றும் வெளிப்புற கூட்டுப் பணியாளர்கள்

Saipem வழங்குநர்கள்களையும் வெளிப்புற கூட்டுப் பணியாளர்களையும் பொருத்தமான தொழில்முறையுடன் தேடுவதை மேற்கொள்கிறது. கொள்கைகளையும் உள்ளடக்கங்களையும் பகிர்ந்து கொள்வதில் உறுதியாக உள்ளதுடன் கொள்கைகளையும் உள்ளடக்கங்களையும் பாதுகாத்து ஊக்குவிக்கும் போது, செயல்திறன்களின் முற்போக்கான முன்னேற்றத்திற்காக நீண்டகால உறவுகளை நிறுவுவதை ஊக்குவிக்கிறது.

டெண்டர்கள், கொள்முதல் மற்றும், பொதுவாக, பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகள் வழங்கல் மற்றும் வெளிப்புற கூட்டுப் பணியாளர்கள் (ஆலோசகர்கள், முகவர்கள் மற்றும் பல) தொடர்பான உறவுகளில், Saipem பணியாளர்கள்:

- வழங்குநர்கள்கள் மற்றும் வெளிப்புற கூட்டுப் பணியாளர்களுடனான தேர்வு மற்றும் உறவுகள் தொடர்பான ஒழுங்குமுறை ஆவணங்களுடன் இணங்குதல் மற்றும் Saipem-ன் உத்தரவுகளுக்கு ஏலம் எடுப்பது முதல் எந்தவொரு வழங்குநர்கள் சந்திப்புத் தேவைகளையும் தவிர்ப்பது; நிறுவப்பட்ட, வெளிப்படையான அளவுகோல்களின் அடிப்படையில் பொருத்தமான மற்றும் புறநிலை தேர்வு முறைகளைப் பின்பற்றுதல்;
- Saipem வாடிக்கையாளர்களின் தரம், செலவுகள் மற்றும் விநியோக நேரங்களின் அடிப்படையில் அவர்களின் நியாயமான எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற அளவிற்குத் தொடர்ச்சியான திருப்திக்கு உத்தரவாதம் அளிப்பதில் வழங்குநர்கள் மற்றும் வெளிப்புற கூட்டுப் பணியாளர்களின் ஒத்துழைப்பைப் பாதுகாத்தல்;
- நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கும், தொடர்புடைய தரப்புகள், Saipem

நிறுவனங்களால் வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுடனான பரிமாற்றங்களின் சட்டபூர்வமான அளவுகோல்களுக்கும் இணங்க, முடிந்தவரை பயன்படுத்தவும்;

- ஒப்பந்தங்களில் கோட்பாடு ஒப்புதல் மற்றும் அதில் உள்ள கொள்கைகளுக்கு இணங்க வேண்டிய கடமை;
- ஒப்பந்தங்களில் உள்ள நிபந்தனைகளுடன் இணங்குதல் மற்றும் கோரிக்கை இணக்கம்;
- நல்ல வணிக நடைமுறைக்கு ஏற்ப வழங்குநர்கள் மற்றும் வெளிப்புற கூட்டுப் பணியாளர்களுடன் வெளிப்படையான மற்றும் திறந்தத் தகவல்தொடர்பைப் பேணுதல்; குறியீட்டின் சாத்தியமான மீறல்கள் குறித்து உடனடியாக அவர்களின் நேரடி மேலதிகாரிகளுக்கும், உத்தரவாதிக்கும் தெரிவித்தல்;
- Saipem-க்கு ஏற்படக்கூடிய விளைவுகளை மதிப்பிடுவதற்காக, ஒரு குறிப்பிட்ட வழங்குநர் அல்லது வெளிப்புற கூட்டுப் பணியாளருடனான எந்தவொரு தீவிரமான சிக்கலின் தொடர்புடைய Saipem செயல்பாடுகளையும் தெரிவித்தல்.

செலுத்த வேண்டிய ஊதிய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட வேண்டிய சேவைகளுக்கு மட்டுமே விகிதாசாரமாக இருக்கும்; ஒப்பந்தத்தின் எதிர் தரப்பைத் தவிர வேறு எந்தத் தரப்பினருக்கும் அல்லது தரப்பினரின் நாடு அல்லது ஒப்பந்தம் செய்யப்பட வேண்டிய நாட்டிலிருந்து வேறுபட்ட மூன்றாம் நாட்டிற்கும் பணம் செலுத்த முடியாது[4].

மேலும், Saipem ஒரு விரிவான வழங்குநர் மதிப்பீட்டு அமைப்பை வழங்குகிறது. தகுதிகாண் கட்டம் முதலாக நெறிமுறை நடத்தைகளில் உள்ள கொள்கைகளுக்கு முரணான நடத்தை குறித்து இதற்குத் தெரியவரும் சமயத்தில் பிந்தையதுக்கு எதிரான நடவடிக்கைகளைப் பின்பற்றுவதற்காக (கண்காணித்தல், அங்கீகாரித்தல், இடைநிறுத்தல், பின்வாங்கல்) இது வழங்கப்படுகிறது.

## 2.5. Saipem-ன் மேலாளர்கள், பணியாளர்கள் மற்றும் கூட்டுப் பணியாளர்கள்

### 2.5.1. மனித வள வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு

ஒரு நிறுவனத்தின் வளர்ச்சியில் பணியாளர்கள் முக்கிய அங்கமாவார்கள். மேலாளர்கள் மற்றும் பணியாளர்களின் அர்ப்பணிப்பும் செயல்நேர்த்தியும் Saipem

[4] தடையின் நோக்கங்களுக்காக, Saipem-ன் எதிரணியான நிறுவனம்/அமைப்பு, அதன் மத்திய கருவூலத் துறையை மூன்றாம் தரப்பு நாடுகளில் நிறுவியிருந்தால் மற்றும்/அல்லது பகுதி அல்லது முழுமையாக நிறுவப்பட்டிருந்தால், அந்நாடுகள் மூன்றாம் நாடுகளாகக் கருதப்படுவதில்லை. ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்குச் செயல்பாட்டு மற்றும் அவசியமான அலுவலகங்கள் அல்லது இயக்க அலகுகள், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கூட்டாளர்களைத் தேர்ந்தெடுப்பது மற்றும் பணம் செலுத்துவது தொடர்பான உள் ஒழுங்குமுறை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் செயல்படுத்தப்படுகின்றன.
இந்தத் தடைசெய்யப்படுதல் நோக்கங்களுக்காக, வழங்குநர் சார்ந்துள்ள அதே குழுவில் உள்ள மற்றொரு நிறுவனத்தின் மத்திய கருவூல நிதிகள் நிறுத்தி வைக்கப்படலாம் என்பதைக் கவனிக்க வேண்டும். இது பணம் செலுத்தலைப் பெறப்போகும் நிறுவனமானது Saipem இன் ஒப்பந்தம் சார்ந்த கடமைகளை நிறைவேற்றுகின்ற முறை மற்றும் அந்த நிறுவனத்தின் பெயரானது பெற்றுள்ள நேர்மைத்தன்மை ஆகியவற்றைச் சரிபார்த்தலுக்கான பொருத்தமான சோதனைகளுக்கு உட்பட்டது.

நோக்கங்களை எட்டுவதற்கான அடிப்படை விழுமியங்களும் நிபந்தனைகளுமாகும்.

மேலாளர்கள் மற்றும் பணியாளர்களின் ஆற்றல்களையும் திறமைகளையும் வளர்ப்பதில் Saipem உறுதி கொண்டுள்ளது. இதனால் அவர்களின் ஆற்றல் மற்றும் படைப்பாற்றல் அவர்களின் திறனை நிறைவேற்றுவதில் முழு வெளிப்பாட்டை வெளிக்கொணர முடியும். மேலும் பணியாளர்களின் மன மற்றும் உடல் ஆரோக்கியம் மற்றும் அவர்களின் கவுரவம் ஆகிய இரண்டையும் கருத்தில் கொண்டு பணி நிலைமைகளைப் பாதுகாக்க முடியும். தேவையற்ற அழுத்தம் அல்லது அசௌகரியம் அனுமதிக்கப்படாது. அதே நேரத்தில் ஆளுமை மற்றும் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருத்தமான பணி நிலைமைகள் மேம்படுத்தப்படுகின்றன.

எந்தவொரு பாகுபாடும் இன்றி, தகுதி மற்றும் நிபுணத்துவத்தின் அடிப்படையில் மட்டுமே நியாயமான சட்டரீதியான மற்றும் ஊதிய உயர்வு பெறுவதை உறுதி செய்து, பொருந்தக்கூடிய சட்ட மற்றும் ஒப்பந்த விதிகளுக்கு இணங்க, அதன் அனைத்து ஊழியர்களுக்கும் சமமான வாய்ப்புகளை வழங்க Saipem தேவையான பணிகளை மேற்கொள்கிறது.

திறமையான செயல்பாடுகள்:

- மனித வளங்கள் தொடர்பான அனைத்து முடிவுகளிலும் தகுதி மற்றும் திறன் (மற்றும் முக்கியமாகத் தொழில்முறை) எந்தவொரு சூழ்நிலையிலும் பின்பற்றுதல்;
- எந்தவொரு பாகுபாடும் இல்லாமல் மனித வளங்களைத் தேர்ந்தெடுத்தல், பணியமர்த்தல், பயிற்சியளித்தல், ஈடுசெய்தல், நிர்வகித்தல்;
- தனிப்பட்ட குணாதிசயங்கள் அல்லது நம்பிக்கைகள் பாகுபாட்டை ஏற்படுத்தாத, அனைத்து Saipem பணியாளர்களுக்கும் அமைதியான சூழலை வழங்கக்கூடிய ஒரு பணிச் சூழலை உருவாக்குதல்.

ஒரு நபரின் கவுரவம், மரியாதை மற்றும் நற்பெயருக்கு, பொதுவான மரியாதைக்குரிய சூழலைப் பேணுவதற்கு ஒவ்வொரு நிலையிலும் Saipem பணியாளர்கள் ஒத்துழைப்பதை Saipem விரும்புகிறது. தாக்குதல், பாரபட்சமான அல்லது தவறான தனிப்பட்ட நடத்தைகளைத் தடுக்க Saipem நடவடிக்கைகளை மேற்கொள்ளும். பணியிடத்திற்கு வெளியே நடந்துகொள்தல் குறிப்பாகப் பணியாளர்கள் கருத்துக்கு எதிராக மனதைப் புண்படுத்தும் வகையிலான செயல்களும் இது சம்பந்தமாகக் கருதப்படுகிறது.

உடல் அல்லது தார்மீக வன்முறையை ஏற்படுத்தும் நடத்தை எப்போதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

### 2.5.2. அறிவு மேலாண்மை

Saipem அதன் கட்டமைப்புகளுக்குள் அறிவை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட கலாச்சாரத்தையும் முன்முயற்சிகளையும் ஊக்குவிக்கிறது. மேலும் வணிக நடவடிக்கைகளின் வளர்ச்சி மற்றும் நிறுவனத்தின் நிலையான வளர்ச்சி தொடர்பாகத் தொழில்முறை குடும்பங்களின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் மதிப்புகள், கொள்கைகள், நடத்தைகள் மற்றும் பங்களிப்புகளை



Saipem Classification - General Use

எடுத்துக்காட்டுகிறது.

Saipem தொழில்முறை குடும்ப உறுப்பினர்களுக்கிடையிலும் பணிக்குழுக்களுக்கிடையிலும், ஒருங்கிணைப்புக்காகவும் எப்படியென்று தெரிந்துகொள்வதை அணுகுவதற்காகவும் தொடர்புகொள்வதற்கான கருவிகளை வழங்கலாம். மேலும் தனது நிறுவன அமைப்புகளின் முக்கியத் தகுதிகளோடு தொடர்புடைய வளர்ச்சி, பரவல், அமைப்பாக்க அறிவு ஆகிய முனைப்புகளை ஊக்குவிக்கவும், சீரான இயக்கத்துக்கு உத்தரவாதமளிப்பதற்கு ஏற்ற ஒப்புநோக்கு சட்டகத்தை வரையறுப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தனிநபர்களிடையே அறிவைப் பகிர்வதற்கும் பரப்புவதற்குமான அமைப்பை மேம்படுத்துவதற்காக, அனைத்து Saipem பணியாளர்களும் தங்கள் திறமைக்குள்ளான செயல்பாடுகளுக்கான அறிவு மேலாண்மை செயல்முறைகளுக்குத் தீவிரமாகப் பங்களிக்கின்றனர்.

### 2.5.3. நிறுவனப் பாதுகாப்பு

Saipem மக்களை மற்றும்/அல்லது நிறுவனத்தின் பருப்பொருள் அல்லது புலனாகா வளங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சேதப்படுத்தக் காரணமாகக்கூடிய ஏதேனும் உள்நோக்கத்துடன் அல்லது உள்நோக்கமில்லாத நடத்தைகளைத் தடுக்கவும் சமாளிக்கவும் நோக்கமாகக் கொண்டு ஆய்விலும், யுக்திகளை உருவாக்குதல் மற்றும் அமல்படுத்துதல், கொள்கைகள் மற்றும் இயங்குதல்சார்ந்த திட்டங்களில் Saipem ஈடுபடுகிறது. தடுப்பு மற்றும் தற்காப்பு நடவடிக்கைகள், செயல் நடவடிக்கைக்கான தேவையை குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. பணியாளர்கள் மற்றும் உடைமைகளுக்கு எதிரான செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அனைத்து Saipem பணியாளர்களும் உகந்த நிறுவனப் பாதுகாப்புத் தரத்தை பராமரிப்பதற்கும், சட்டவிரோதமான அல்லது ஆபத்தான நடத்தைகளைத் தவிர்ப்பதற்கும், Saipem உடைமைகள் அல்லது மனித வளங்களுக்குத் தீங்கு விளைவிப்பதாக மூன்றாம் தரப்பினரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலையும் தங்கள் நேரடி மேலதிகாரி அல்லது அவர்கள் சார்ந்த அமைப்பிற்குப் புகாரளிப்பார்கள். அத்துடன் தொடர்புடைய Saipem கட்டமைப்பிற்கும் தெரிவிப்பார்கள்.

தனிப்பட்ட பாதுகாப்பில் குறிப்பிட்ட கவனம் செலுத்தப்பட வேண்டிய எந்தவொரு சந்தர்ப்பத்திலும், Saipem வழங்கிய இந்த விஷயத்தில் Saipem பணியாளர்கள் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். தங்களது சொந்த பாதுகாப்பு அல்லது மற்றவர்களின் பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கும் நடத்தைகளைத் தவிர்த்து, தங்களின் சொந்த பாதுகாப்பு அல்லது மூன்றாம் தரப்பினரின் பாதுகாப்பிற்காக உடனடியாகத் தங்கள் நேரடி மேலதிகாரிக்கு எந்த ஆபத்தையும் தெரிவிக்க வேண்டும்.

### 2.5.4. பணியிடத்தில் துன்புறுத்தல் அல்லது கொடுமைப்படுத்துதல்

நிறுவனத்தில் நலனை அதிகரிப்பதற்கான பணி முறைகளைச் செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முயற்சிகளை Saipem ஆதரிக்கிறது.

நிறுவனத்தின் உள்ளே அல்லது வெளியே தனிப்பட்ட பணி உறவுகளில் கொடுமைப்படுத்துதல் என்று பொருள் கொள்ளக்கூடிய துன்புறுத்தல் அல்லது நடத்தைகள் எதுவும் இருக்கக்கூடாது என்று Saipem தெரிவிக்கிறது. இத்தகைய நடத்தை பின்வருமாறு:

- தனிப்பட்ட ஊழியர்கள் அல்லது ஊழியர்களின் குழுக்களுக்கு அச்சுறுத்தும், விரோதமான, தனிமைப்படுத்தல் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாரபட்சமான சூழலை உருவாக்குதல்;
- மற்றவர்களின் பணிக் கடமைகளை நிறைவேற்றுவதில் நியாயமற்ற தலையீடு;
- தங்கள் சொந்த விஷயம் சார்பாக அல்லது பிற ஊழியர்களின் சார்பாகத் தனிப்பட்ட போட்டித்தன்மையின் காரணங்களுக்காக மற்றவர்களின் வேலை வாய்ப்புகளுக்கான பாதையில் தடைகளை ஏற்படுத்துதல்.

எந்தவொரு வன்முறை அல்லது துன்புறுத்தல், பாலியல் துன்புறுத்தல் அல்லது தனிப்பட்ட மற்றும் கலாச்சாரப் பன்முகத்தன்மையின் அடிப்படையில் துன்புறுத்தல் ஆகியவை தடைசெய்யப்பட்டுள்ளன. இத்தகைய நடத்தை பின்வருமாறு:

- பாலியல் கவனம் அல்லது தனிப்பட்ட மற்றும் கலாச்சார பன்முகத்தன்மையை ஏற்பதில் அதைப் பெறுபவரின் பணிவாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கீழிறக்கும் முடிவுகளை எடுப்பது;
- ஒருவரின் நிலையைப் பயன்படுத்திக் கொண்டு பாலியல் ரீதியாகக் கவனத்தை ஈர்த்தல்;
- பெறுநர் வெளிப்படையாக அல்லது தெளிவாக உடன்பாடின்றி இருந்தபோதிலும் தனிப்பட்ட உறவுகளை முன்மொழிதல்;
- உடல் குறைபாடுகள் மற்றும் உடல் அல்லது மனநலக் குறைபாடு அல்லது கலாச்சார, மத அல்லது பாலியல் பன்முகத்தன்மையின் வடிவங்களைக் குறிப்பிடுதல்.

### 2.5.5. ஆல்கஹால் அல்லது போதைப்பொருள் மற்றும் புகைபிடித்தல் தடைகளைத் தவறாகப் பயன்படுத்துதல்

அனைத்து Saipem பணியாளர்களும் பணியிடத்தில் பொதுவான மரியாதைக்குரிய சூழலை மேம்படுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் தனிப்பட்ட முறையில் பங்களிக்க வேண்டும்; மற்றவர்களின் உணர்வை மதிப்பதில் குறிப்பாகக் கவனம் செலுத்தப்படுகிறது.

ஆகவே, Saipem பணியாளர்கள் பணிச் செயல்பாடுகளின் போது மற்றும் பணியிடத்தில் பணிபுரியும் போது, ஆல்கஹால் அல்லது போதைப்பொருள் அல்லது ஒத்த விளைவைக் கொண்ட பொருட்களின் கீழ், அவர்கள் ஏற்படுத்தக்கூடிய ஆபத்தை அறிந்திருக்க வேண்டும் என்று கருதுகிறது. நாள்பட்ட போதையானது வேலை செயல்திறனைப் பாதிக்கும் போது அவை ஒப்பந்த விளைவுகளின் அடிப்படையில் மேற்கூறிய நிகழ்வுகளுடன் ஒத்ததாகக் கருதப்படும்; வேலைவாய்ப்பு ஒப்பந்தங்களில் வழங்கப்பட்டுள்ளபடி இந்தத் துறையில் சமூக நடவடிக்கைக்கு ஆதரவாக நடவடிக்கை எடுப்பதில் Saipem உறுதியாக உள்ளது.

இது தடைசெய்யப்பட்டுள்ளது:

- எந்தவொரு காரணத்திற்காகவும், மருந்துகள் அல்லது ஒத்த விளைவைக் கொண்டுள்ள பொருட்களை, பணியின் போதும் பணியிடத்திலும் வைத்திருத்தல், உட்கொள்ளுதல், வழங்குதல் அல்லது கொடுத்தல்;
- பணியிடத்தில் புகைப்பிடித்தல். புகைபிடிப்பதைக் கைவிட உதவுவதற்கான தன்னார்வ முன்முயற்சிகளை Saipem ஆதரிக்கிறது. புகைபிடிக்கும் பகுதிகளை அடையாளம் காண்பதிலும், பணியிடத்தில் "புகைப்பிடிப்பவர்கள் அதனை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல்" மற்றும் புகைபிடிப்பதால் மற்றவர்களுக்கு ஏற்படும் உடல் அசௌகரிய நிலையை குறிப்பாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## 3. நெறிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான கருவிகள்

### 3.1. <u>அகக் கட்டுப்பாட்டு அமைப்பு</u>

Saipem போதுமான உள் கட்டுப்பாட்டு முறையை ஊக்குவித்துப் பராமரிக்கிறது. எ.கா., சரியாகக் குறிப்பிடும்படியான முக்கிய அல்லது பயனுள்ள கருவிகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை ஆவணங்களுடன் இணங்குவதை உறுதி செய்தல், நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தல், செயல்பாடுகளைத் திறம்பட நிர்வகித்தல் மற்றும் துல்லியமான மற்றும் முழுமையான கணக்கியல் மற்றும் நிதி விவரங்களை வழங்குதல் போன்றவை.

பயனுள்ள உள் கட்டுப்பாட்டு முறையைச் செயல்படுத்துவதற்கான பொறுப்பு Saipem-ன் நிறுவன கட்டமைப்பின் ஒவ்வொரு மட்ட பணியாளர்களுடனும் பகிரப்படுகிறது; எனவே, அனைத்து Saipem பணியாளர்களும், அவர்களின் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகளுக்கு ஏற்ப, உள் கட்டுப்பாட்டு அமைப்பின் சரியான செயல்பாட்டை வரையறுத்துத் தீவிரமாகப் பங்கேற்கலாம்.

Saipem கட்டுப்பாடுகள், கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறை ஆவணங்கள் மற்றும் தகவலறிந்த மற்றும் தன்னார்வ கட்டுப்பாடு சார்ந்த மனநிலையைப் பின்பற்றுவதன் மூலம் அமைப்பின் ஒவ்வொரு மட்டத்திலும் அதிகாரப் பரவலாக்கத்தை ஊக்குவிக்கிறது. இதன் விளைவாக, Saipem-ன் நிர்வாகம் முதல் இடத்தில் இருப்பதுடன் அனைத்து Saipem பணியாளர்களும் அனைத்துச் சந்தர்ப்பத்திலும் Saipem உள் கட்டுப்பாட்டு அமைப்பில் பங்களித்து, நேர்மறையான அணுகுமுறையுடன், இந்நோக்கத்திற்காக அதன் கூட்டுப்பணியாளர்களை ஈடுபடுத்துகிறது.

ஒவ்வொரு பணியாளரும் தனது பணியுடன் தொடர்புடைய நிறுவனத்தின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும்; Saipem-ன் நியமிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் வளங்களை முறையற்ற வகையில் பயன்படுத்தக் கூடாது, அல்லது மற்றவர்களைப் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது.

மோசடிகளில் பங்கேற்பது அல்லது அதனும் தொடர்புடைய எந்தவொரு செயல்முறைகள் மற்றும் நடத்தைகளும் எந்தப் பாரபட்சமுமின்றி குற்றச் செயலாகக் கருதப்படும்.

கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை அமைப்புகள், உள் தணிக்கை செயல்பாடு மற்றும் நியமிக்கப்பட்ட தணிக்கை நிறுவனங்கள் அவற்றின் செயல்பாடுகளைச் செய்யத் தேவையான அனைத்துத் தரவு, ஆவணங்கள் மற்றும் தகவல்களுக்கான முழு அணுகலைக் கொண்டுள்ளன.

### 3.1.1. நலன் முரண்பாடுகள்

Saipem ஆட்கள் Saipem நலனுக்காகச் செய்யப்படும் நடவடிக்கைகளைத் தவிர்த்து முதலீடு, வணிகம் மற்றும் பிற நடவடிக்கைகளில் ஈடுபடும் உரிமையை, அவை சட்டத்தின்படியும் Saipem உடனான அவர்களது கடப்பாடுகளுக்கும் ஏற்ப இருக்கும் பட்சத்தில் அவற்றை மதித்து ஏற்றுக்கொள்கிறது. சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடமும் அதில் ஆர்வமுள்ளவர்களுக்கும் வெளிப்படைத்தன்மையுடன், நிலையானதும் முறையாக துல்லியத்துடனும் பரிவர்த்தனைகளை உறுதிப்படுத்துவதற்கு, ஒழுங்குமுறை ஆவணங்களில் வரையறுக்கப்பட்ட விதிகளை Saipem பின்பற்றுகிறது.

Saipem மேலாளர்களும் பணியாளர்களும் தனிப்பட்ட மற்றும் குடும்பப் பொருளாதாரச் செயல்பாடுகளுக்கும் நிறுவனத்துக்குள் அவர்கள் பணிகளுக்கும் இடையே நலன் முரண்பாடுகளைத் தவிர்த்து அவற்றைத் தெரியப்படுத்த வேண்டும். குறிப்பாக, அனைத்து மேலாளர்களும் பணியாளர்களும் அவர்கள் அல்லது அவர்களின் அறிவுக்குத் தெரிந்த வரை, அவர்களின் வாழ்க்கைத்துணை, உறவினர்கள் மற்றும் திருமணத்தால் ஏற்பட்ட உறவில் 4ஆம் நிலையிலுள்ள உறவினர்கள் அல்லது கூட இருப்பவர்களுக்கு வழங்குநர்கள், வாடிக்கையாளர்கள், போட்டியாளர்கள், மூன்றாம் தரப்பினர் அல்லது தொடர்புடைய கட்டுப்பாட்டு நிறுவனங்கள் அல்லது துணை நிறுவனங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரை பொருளாதார மற்றும் நிதி நலன்களை (உரிமையாளர் அல்லது பங்குதாரர்) பெறும் ஏதேனும் குறிப்பிட்ட சூழ்நிலைகள் மற்றும் செயல்பாடுகளை தெரிவிக்க வேண்டும். அவர்கள் நிறுவனத்தின் நிர்வாகம் அல்லது கட்டுப்பாடு அல்லது அங்குள்ள மேலாண்மைச் செயல்பாடுகளை மேற்கொள்கிறார்களா என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

பின்வரும் சூழல்களிலும் நலன் முரண்பாடுகள் ஏற்படலாம்:

- நிறுவனத்தில் ஒருவரின் பதவியைப் பயன்படுத்துதல், அல்லது தகவல் அல்லது ஒருவரின் பணியின் போது பெறப்பட்ட வணிக வாய்ப்புகள், ஒருவரின் தேவையற்ற நன்மைக்காக அல்லது மூன்றாம் தரப்பினரின் தேவையற்ற நன்மைக்காகப் பயன்படுத்துதல்;
- ஊழியர்கள் மற்றும்/அல்லது அவர்களது உறவினர்களால் வழங்குநர்கள், துணை வழங்குநர்கள் மற்றும் போட்டியாளர்களுக்கான எந்தவொரு வேலையும் செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும், நிறுவனத்தின் நலனுடன் முரண்படக்கூடிய எந்தவொரு சூழ்நிலையையும் செயல்பாட்டையும் Saipem-ன் நிர்வாகமும் பணியாளர்களும் தவிர்க்க வேண்டும், அல்லது Saipem-ன் சிறந்த நலனுக்காகவும், கொள்கைகள் மற்றும் உள்ளடக்கங்களுக்கு இணங்குவதற்கான பாரபட்சமற்ற முடிவுகளை எடுக்கும் திறனின் மீது இது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

நலன் முரண்பாட்டுக்கு வழிவகுக்கும் எந்தவொரு சூழ்நிலையும் ஒருவரின் நேரடி மேலதிகாரிக்கு அல்லது அவர்கள் சேர்ந்த குழுவுக்கு உடனடியாக எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். ஊழியர்கள், அனைத்துச் சந்தர்ப்பத்திலும், தகுதிவாய்ந்த மனித வளங்கள், அமைப்பு மற்றும் சேவைகள் செயல்பாடு மற்றும் உத்தரவாதம் குறித்து எழுத்து வடிவத்தில் தெரிவிக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட தரப்பு உடனடியாகச் செயல்பாட்டு/முடிவெடுக்கும் செயல்பாட்டில் பங்கேற்பதை நிறுத்திவிடும்.

தகுதிவாய்ந்த மனிதவளங்களின் செயல்பாடு மீது அபிப்பிராயத்தைக் கேட்டபின், நேரடி மேலதிகாரி அல்லது உறுப்பு செய்ய வேண்டியது:

- சிக்கல்தன்மையைக் கண்டறிந்து, குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், செயல்பாடுகளின் செயல்திறனில் நடத்தைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் நியாயத்தன்மையை உறுதி செய்யக்கூடிய செயல்பாட்டுத் தீர்வுகளை அடையாளம் காணும்;
- அவற்றைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு எழுத்துப்பூர்வமாக அனுப்புகிறது. மேலும் அதன் நகல்களைத் தொடர்புடைய மனித வளங்கள், அமைப்பு மற்றும் சேவைகள் செயல்பாடு மற்றும் உத்தரவாதிக்கும் அனுப்புகிறது;
- பெறப்பட்ட மற்றும் அனுப்பப்பட்ட கோப்புகளை ஆவணப்படுத்துகிறது.

### 3.1.2. கணக்குப் பதிவுகளின் வெளிப்படைத்தன்மை

கணக்கியல் வெளிப்படைத்தன்மை என்பது உண்மையான, துல்லியமான மற்றும் முழுமையான தகவல்களைத் தொடர்புடைய புத்தக பதிவுகளுக்கான அடிப்படையாகப் பயன்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டது. நிறுவன அமைப்புகளின் அனைத்து உறுப்பினர்களும், மேலாளரும் அல்லது பணியாளரும் தங்கள் தனிப்பட்ட துறையில், செயல்பாட்டு நிகழ்வுகள் சரியான நேரத்தில் கணக்கியல் புத்தகங்களில் பதிவு செய்யப்படுவதை உறுதி செய்யும்.

நிதிநிலை அறிக்கைகளில் தகவல்களின் வெளிப்படைத்தன்மை மற்றும் அறிதல்தன்மையை மிகவும் பாதிக்கும் வகையில் நடந்து கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பரிவர்த்தனையும் அங்கீகரிக்கச் சரியான துணை சான்றுகள் சேமிக்கப்படும்:

- எளிதான மற்றும் சரியான நேரத்திலான கணக்குப் பதிவுகள்;
- பொறுப்புடைமைகளின் வெவ்வேறு நிலைகள், பணி விநியோகம் மற்றும் அவற்றைப் பிரித்தலை அடையாளம் காணுதல்;
- பொருள் அல்லது விளக்கப் பிழைகள் ஏற்படும் சாத்தியத்தைத் தவிர்க்க பரிவர்த்தனையின் துல்லியமான பிரதிநிதித்துவம்.

ஒவ்வொரு பதிவும் துணை ஆதாரங்களுடன் காட்டப்படுவதைச் சரியாகப் பிரதிபலித்தல். அனைத்து Saipem பணியாளர்களும் தர்க்கரீதியான அளவுகோல்களின்படி ஆவணங்களை எளிதில் கண்டறிந்து தாக்கல் செய்யலாம் என்பதை உறுதி செய்வார்கள்.



Saipem Classification - General Use

Saipem பணியாளர் குறைபாடுகள், மோசடி, கணக்கியலில் அலட்சியம் அல்லது கணக்கியல் அடிப்படையிலான ஆவணங்களில் மோசடிகளைக் கண்டறிந்தால், அதனை அவர்களின் நேரடி மேலதிகாரிகளின் கவனத்திற்கோ அல்லது அவர்கள் சேர்ந்த குழுவுக்கோ, உத்தரவாதிக்கோ கொண்டு வருவார்கள்.

### 3.2. <u>சுகாதாரம், பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் பொதுப் பாதுகாப்பு</u>

Saipem-ன் நடவடிக்கைகளானது பொருந்தக்கூடிய தொழிலாளர் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் பொதுப் பாதுகாப்பு ஒப்பந்தங்கள், சர்வதேச தரங்கள் மற்றும் சட்டங்கள், ஒழுங்குமுறைகள், நிர்வாக நடைமுறைகள் மற்றும் அது செயல்படும் நாடுகளின் தேசிய கொள்கைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும்.

சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் நோக்கிற்காக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு Saipem தீவிரமாகப் பங்களிக்கிறது. இத்தகைய நடவடிக்கைகளின் செயல்பாட்டு மேலாண்மை சுற்றுச்சூழல் மற்றும் எரிசக்தி செயல்திறனைப் பாதுகாப்பதற்கான மேம்பட்ட அளவுகோல்களின்படி மேற்கொள்ளப்படும். இது சிறந்த பணி நிலைமைகளை உருவாக்குவதோடு பணியாளர்களின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தங்களது பொறுப்புக்குள்ளான பகுதிகளுக்குள், Saipem பணியாளர்கள் தமக்கும் தங்கள் சகப்பணியாளர்கள் மற்றும் மூன்றாம் தரப்பினருக்கும் ஆபத்துத் தடுப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பொதுப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றில் தீவிரமாகப் பங்கேற்பார்கள்.

### 3.3. <u>ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் அறிவுசார் சொத்துரிமைப் பாதுகாப்பு</u>

Saipem குழுவானது நிர்வாகம் மற்றும் ஊழியர்களின் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு நடவடிக்கைகளை அவர்களின் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகளுக்குள் ஊக்குவிக்கிறது. அத்தகைய நடவடிக்கைகளால் உருவாக்கப்படும் அறிவுசார் சொத்துக்கள் Saipem-ன் முக்கியமான மற்றும் அடிப்படைப் பாரம்பரியமாகும்.

ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் குறிப்பாக ஆற்றல் செயல்திறனை ஆதரித்தல், சுற்றுச்சூழல் மீதான தாக்கத்தைக் குறைத்தல், Saipem செயல்படும் இடங்களில் உள்ள ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்புக் குறித்துக் கவனம் செலுத்துதல், மேலும் வணிக நடவடிக்கைகளின் பொதுவான நிலைத்தன்மை ஆகியவற்றை ஆதரிக்கும் பொருட்கள், கருவிகள், செயல்முறைகள் மற்றும் நடத்தைகளை மக்களிடையே கொண்டு சேர்ப்பதில் கவனம் செலுத்துகின்றன.

Saipem பணியாளர்கள் அவர்களின் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகளுக்குள், அறிவுசார் சொத்துக்களின் வளர்ச்சி, பாதுகாப்பு மற்றும் மேம்பாடு ஆகியவற்றை அனுமதிக்கும் பொருட்டு, அறிவுசார் சொத்துக்களை நிர்வகிக்கத் தீவிரமாகப்



Saipem Classification - General Use

பங்களிக்க வேண்டும்.

## 3.4. இரகசியத்தன்மை

### 3.4.1. வியாபார இரகசியங்களைப் பாதுகாத்தல்

Saipem-ன் நடவடிக்கைகளுக்குக் கையகப்படுத்தல், சேமித்தல், செயல்படுத்துதல், தகவல் தொடர்பு மற்றும் தகவலைப் பரப்புதல், ஆவணங்கள் மற்றும் பேச்சுவார்த்தைகள், நிர்வாகச் செயல்பாடுகள், நிதி பரிவர்த்தனைகள் தொடர்பான பிற தகவல்கள், மேலும் எவ்வாறு அவற்றை (ஒப்பந்தங்கள், பத்திரங்கள், அறிக்கைகள், குறிப்புகள், ஆய்வுகள், வரைபடங்கள், படங்கள், மென்பொருள் போன்றவை) உடன்பாடுகளுக்கு இணங்க நிறுவனத்துக்கு வெளியே வெளியிடாமல் இருக்கலாம் அல்லது முறையற்ற அல்லது முன்கூட்டிய நேரத்தில் வெளிப்படுத்துவது நிறுவனத்தின் நலனுக்குத் தீங்கு விளைவிக்கலாம் என்பதை அறிந்து கொள்வது ஆகியவை தொடர்ந்து தேவைப்படுகின்றன.

மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் வெளிப்படைத்தன்மை, மற்றும் அமலில் உள்ள விதிமுறைகளால் ஏற்படுத்தப்படும் தகவல் கடப்பாடுகள் குறித்து எந்தவித பாரபட்சமும் இல்லாமல், Saipem பணியாளர்கள் தங்கள் பணிகளின் காரணமாக அவர்கள் பெற்ற ஒவ்வொரு தகவலுக்கும் சூழ்நிலைகளுக்குத் தேவையான ரகசியத்தன்மையை உறுதி செய்ய வேண்டும்.

அனைத்துத் தகவல்களையும், Saipem-ல் பெறப்பட்ட அல்லது பணி நடவடிக்கைகளின் போது செயல்படுத்தப்பட்ட அல்லது Saipem-க்குச் சொந்தமான Saipem-ல் உள்ள பணிகள் காரணமாகக் கிடைத்த அறிவையும் தரவையும், மேலும் குறிப்பிட்ட ஒழுங்குமுறை ஆவணங்களுக்கு இணங்க நேரடி மேலதிகாரியின் குறிப்பிட்ட அங்கீகாரமின்றிப் பயன்படுத்தவோ, பகிரவோ அல்லது வெளியிடவோ கூடாது.

### 3.4.2. தனியுரிமைப் பாதுகாப்பு

Saipem பணியாளர்கள் மற்றும் மூன்றாம் தரப்பினரின் தகவல்களைப் பாதுகாப்பதற்கு Saipem உறுதிபூண்டுள்ளது. Saipem-க்கு உள்ளே அல்லது Saipem-ன் வணிகத்தின் நடத்தைகளால் உருவாக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட, மற்றும் அத்தகைய தகவல்களை முறையற்ற முறையில் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்கு Saipem உறுதிபூண்டுள்ளது.

தனிப்பட்ட தரவுகளை அதன் கட்டமைப்புகளுக்குள் செயலாக்குவது என்பது அடிப்படை உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும், அத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பினரின் கௌரவத்திற்கும், நடைமுறையில் உள்ள சட்டப்பிரிவுகளின் அடிப்படையில் மதிப்பளிக்க Saipem உத்தரவாதம் அளிக்கிறது என்பதைக் குறிக்கிறது.

தனிப்பட்ட தரவு சட்டபூர்வமான மற்றும் நியாயமான முறையில் செயலாக்கப்படும். சேகரிக்கப்பட்ட மற்றும் சேமிக்கப்பட்ட தரவுகள் குறிப்பிட்ட, வெளிப்படையான மற்றும் சட்டபூர்வமான நோக்கங்களுக்காக மட்டுமே அவசியமானவை ஆகும்.

சேகரிப்பு நோக்கத்துக்கு தேவையான கால அளவுக்கு மட்டுமே தரவுகள் சேமித்து வைக்கப்படும்.

அழிவு மற்றும் இழப்புகள் அல்லது அங்கீகாரமற்ற அணுகல் அல்லது செயலாக்கத்தின் எந்த அபாயத்தையும் தவிர்ப்பதற்கு, தனிப்பட்ட தரவைச் சேமித்து வைத்திருக்கும் அனைத்துத் தரவுத்தளங்களுக்கும் பொருத்தமான தடுப்புப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் Saipem பின்பற்றும்.
Saipem பணியாளர்கள் பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும்:

- தங்களின் பணி மற்றும் பொறுப்புகளின் நோக்கங்களுக்குத் தேவையான மற்றும் பொருத்தமான தரவுகளை மட்டுமே பெற்று செயலாக்குதல் வேண்டும்;
- குறிப்பிட்ட ஒழுங்குமுறை ஆவணங்களுக்குள் மட்டுமே அத்தகைய தரவைப் பெற்று செயலாக்க வேண்டும். மேலும் அங்கீகரிக்கப்படாத தரப்பினர் அணுகுவதைத் தடுக்கும் வகையில் தரவைச் சேமிக்க வேண்டும்;
- அணுகல் அங்கீகாரத்துடன் கூடிய எந்தவொரு தரப்பினரும் தரவின் சுருக்கமான விஷயங்களை எளிதில் பெறக்கூடிய வகையில் முடிந்தவரை துல்லியமாக, முழுமையானதாக மற்றும் உண்மையானதாகத் தரவைப் பிரதிநிதித்துவப்படுத்தவும் ஒழுங்கமைவுச் செய்யவும் வேண்டும்;
- குறிப்பிட்ட ஒழுங்குமுறை ஆவணங்களுக்குட்பட்டு, அல்லது அவர்களின் நேரடி மேலதிகாரியால் வழங்கப்படும் அங்கீகாரத்திற்கு உட்பட்டு அத்தகைய தரவை வெளியிட வேண்டும் மற்றும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும், அத்தகைய தரவைச் சோதித்த பின்னரே வெளியிட வேண்டும். மேலும் Saipem உடன் எந்தவகையான உறவைக் கொண்டு பிணைக்கப்பட்டிருந்தாலும் மற்றும் பொருந்துமென்றால், மூன்றாம் தரப்பினரின் ஒப்புதலைப் பெற்ற பிறகே தொடர்புடைய மூன்றாம் தரப்பினரைக் கட்டுப்படுத்துவதில் உள்ள முழுமையான அல்லது தொடர்புடைய கட்டுப்பாடுகள் பற்றிய குறிப்பையும் தயாரித்தல் வேண்டும்.

### 3.4.3. சங்கங்களில் மேலாண்மை மற்றும் உறுப்பினராக இருத்தல், முன்னெடுப்புகள், நிகழ்வுகள் அல்லது வெளி கூட்டங்களில் பங்கேற்றல்

அளிக்கப்படும் வேலை அல்லது தொழில்முறைச் செயல்பாடுகளுடன் இணக்கமாக இருந்தால் சங்கங்களில் உறுப்பினராக இருத்தல், முன்முயற்சிகள், நிகழ்வுகள் அல்லது வெளி கூட்டங்களில் பங்கேற்றல் போன்றவற்றை Saipem ஆதரிக்கிறது. உறுப்பினர்நிலையும் பங்கேற்பும் கருதப்படும் விதம்:

- சங்கங்களில் உறுப்பினராக இருத்தல், மாநாடுகள், பயிலரங்குகள், கருத்தரங்குகள், படிப்புகள் ஆகியவற்றில் பங்குகொள்ளுதல்;
- பொதுவாகக் கட்டுரைகள், ஆவணங்கள் மற்றும் வெளியீடுகளைத் தயார் செய்தல்;
- பொது நிகழ்ச்சிகளில் பொதுவாகப் பங்கேற்பது.

இது சம்பந்தமாக, Saipem-ன் குறிக்கோள்கள், நோக்கங்கள், செயல்திறன் மற்றும் கருத்துகள் குறித்த தரவு அல்லது தகவல்களை விளக்கும் அல்லது வெளிப்படுத்தும் பொறுப்பில் உள்ள Saipem-ன் நிர்வாகம் மற்றும் ஊழியர்கள், சந்தை முறைகேடுகள் தொடர்பான ஒழுங்குமுறை ஆவணங்களுக்கு மட்டும் இணங்காமல், பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் நூல்கள் மற்றும் அறிக்கைகள் போன்றவற்றைத் தயார் செய்வதற்கு அவர்களின் நேரடி மேலதிகாரிகளிடமிருந்து தேவையான அங்கீகாரத்தைப் பெறவேண்டும். அத்துடன் தகுந்த Saipem கட்டமைப்போடு உள்ளடக்கங்கள் ஒத்துப்போக வேண்டும்.

## 4. நெறிசார் கோட்பாடுகளுக்கான பயன்பாடு மற்றும் ஒப்புநோக்கு அம்சங்களின் எல்லை

விதிமுறைகளின் கொள்கைகள் மற்றும் உள்ளடக்கங்கள் Saipem பணியாளர்களுக்கும் செயல்பாடுகளுக்கும் பொருந்தும்.

பகுதிளவுக்குச் சொந்தமான நிறுவனங்களின் நிறுவன அமைப்புகளில் Saipem சுட்டிக்காட்டிய பிரதிநிதிகள், குழுமம் மற்றும் கூட்டு முயற்சிகளில் விதிமுறைகளின் கொள்கைகள் மற்றும் உள்ளடக்கங்களை அந்தந்த துறைகளுக்குள் ஊக்குவிக்க வேண்டும்.

இயக்குநர்கள் மற்றும் மேலாளர்கள் விதிமுறைகளின் கொள்கைகளையும் உள்ளடக்கங்களையும் முதலில் செயல்படுத்த வேண்டும். நிறுவனத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அவர்களுக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு நம்பிக்கை, ஒத்திசைவு மற்றும் குழு உணர்வை மேம்படுத்த வேண்டும். தங்களுக்குக் கீழே பணிபுரிபவர்களுக்கு, தங்களின் நடத்தை மூலம் ஒரு முன்மாதிரியாக விளங்க வேண்டும். விதிமுறைகளுக்கு இணங்க கீழ்ப்பணியாளர்களைச் செயல்படவைக்க வேண்டும். மேலும் குறிப்பிட்ட விதிமுறைகள் குறித்துக் கேள்விகள் மற்றும் ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

விதிமுறைகளுடன் முழு இணக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள, Saipem பணியாளர் எவர் வேண்டுமானாலும் நேரடியாக உத்தரவாதிகளுக்குக் கூட விண்ணப்பம் செய்யலாம்.

### 4.1. <u>கோட்பாட்டினைத் தெரிந்துகொள்ளும் கடமை மற்றும் அதில் ஏதேனும் மீறலிருந்தால் புகாரளித்தல்</u>

நிறுவனத்தின் அக இணையம் மற்றும் ஆவண மேலாண்மை அமைப்பில் அனைத்து ஊழியர்களுக்கும் விதிமுறைகள் கிடைக்கும்படி செய்யப்பட்டுள்ளது. மேலும் நிறுவனத்தின் இணையதளத்தில் Saipem-ன் ஊழியர்கள் மட்டுமல்ல - அனைத்துப் பயனர்களுக்கும் இந்த விதிமுறைகள் கிடைக்கும்படி செய்யப்பட்டுள்ளது.

அனைத்து Saipem ஆட்களும் அவர்களது சொந்தச் செயல்பாடுகளையும் பொறுப்புகளையும் ஆளக்கூடிய கொள்கைகளையும் கோட்பாட்டின் உள்ளடக்கங்களையும் அதேபோல உசாவலுக்கான ஒழுங்குமுறை ஆவணங்களையும் தெரிந்துகொள்ளவும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

அனைத்து Saipem பணியாளர்களும் பின்பற்ற வேண்டியன:

- அத்தகைய கொள்கைகள், உள்ளடக்கங்கள் மற்றும் ஒழுங்குமுறை ஆவணங்களுக்கு முரணான எந்த நடத்தையையும் தவிர்க்கவும்;
- தங்களின் தகுதிக்கான துறையில், தங்கள் கூட்டுப்பணியாளர்களைக் கவனமாகத் தேர்ந்தெடுத்து, அவர்கள் விதிமுறைகளை முழுமையாகப் பின்பற்றுவதை உறுதிசெய்க;
- Saipem உடனான வணிக உறவில் எந்த மூன்றாம் தரப்பினரும் தேவையான விதிமுறைகளை அறிந்திருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்;
- சாத்தியமான மீறல்கள் அல்லது விதிமுறைகளை மீறுவதற்கான கோரிக்கைகள் குறித்துப் பங்குதாரர்களால் வழங்கப்பட்ட தகவல்கள் அல்லது தங்களின் அவதானிப்புகளை உடனடியாக அவர்களின் நேரடி மேலதிகாரிக்கு அல்லது அவர்கள் சார்ந்த அமைப்புக்கு, மற்றும் உத்தரவாதிக்கு அறிக்கையளிக்க வேண்டும்; தணிக்கை மற்றும் இடர் குழு, சட்டரீதியான தணிக்கையாளர்கள் குழு மற்றும் Saipem SpA-ன் இணக்கக் குழு ஆகியவை குறிப்பிடுகின்ற ஒழுங்குமுறை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளின்படி சாத்தியமான மீறல்கள் பற்றிய அறிக்கைகள் அனுப்பப்பட வேண்டும்;
- சாத்தியமான மீறல்களை நிறுவுவதற்கு உத்தரவாதியுடனும் பொருந்தக்கூடிய ஒழுங்குமுறை ஆவணங்களால் ஒப்படைக்கப்பட்ட செயல்பாடுகளுடனும் ஒத்துழைத்தல் வேண்டும்;
- தேவையான போதெல்லாம் உடனடித் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மற்றும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும், எத்தகைய பழிவாங்கலையும் தடுக்கவும் வேண்டும்.

Saipem பணியாளர்களின் நேரடி மேலதிகாரிகள் அல்லது அவர்களின் அமைப்பு மற்றும் உத்தரவாதம் தருபவரைத் தவிர, மற்றவர்களிடம் Saipem பணியாளர்கள் தனிப்பட்ட விசாரணைகளை நடத்தவோ, தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவோ அனுமதிக்கப்படுவதில்லை. விதிமீறல் நடைபெற்றதாகச் சொல்லப்பட்ட பிறகு, எந்தவொரு Saipem பணியாளரும் அவர் அல்லது அவள் பழிவாங்கப்படுவதாக உணர்ந்தால், அவர் அல்லது அவள் நேரடியாக உத்தரவாதிக்கு விண்ணப்பிக்கலாம்.

## 4.2. <u>ஒப்புநோக்கு கட்டமைப்புகளும் மேற்பார்வையும்</u>

உத்தரவாதம் தருபவரை நியமிப்பதற்கும், உறுதியளிப்பதற்கும் Saipem கடமைப்பட்டுள்ளது:

- Saipem பணியாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களிடையே விதிமுறைகளின் கொள்கைகள் மற்றும் உள்ளடக்கங்களைப் பரவலாகப் பரப்ப வேண்டும். விதிமுறைகளின் விளக்கம் மற்றும் செயல்பாட்டைப் புரிந்துகொள்வதற்கும் தெளிவுபடுத்துவதற்கும் சாத்தியமான அனைத்து கருவிகளையும் வழங்குவதோடு, வளர்ந்து வரும் சிவில் உணர்திறன்களுக்கும் தொடர்புடைய சட்டங்களுக்கும் தகுந்த விதிமுறைகளைப் புதுப்பிக்கவும் வேண்டும்;

- விதிமுறைகளின் கொள்கைகள் மற்றும் உள்ளடக்கங்கள் அல்லது ஒப்புநோக்கு ஒழுங்குமுறை ஆவணங்களை மீறுவது குறித்த எந்தவொரு அறிவிப்பையும் பற்றிய மதிப்பீடு; உண்மைகளின் புறநிலை மதிப்பீடு மற்றும் தேவைப்பட்டால், பொருத்தமான ஒழுங்கு நடவடிக்கைகளைப் பின்பற்றுவது; விதிமுறைகளின் சாத்தியமான மீறல்கள் அல்லது தொடர்புடைய ஒழுங்குமுறை ஆவணங்கள் பற்றிய தகவல்களை வழங்கியதற்காக யாரும் எந்தவொரு பழிவாங்கல் காரணமாகவும் பாதிக்கப்படக்கூடாது.

### 4.2.1. கோட்பாட்டு நெறிமுறைகளின் உத்தரவாதி

கோட்பாட்டு நெறிமுறைகளானது, சட்டமன்ற ஆணை எண் 231, ஜூன் 8, 2001ன்படி குற்றங்களாகக் கருதப்படுபவற்றிலிருந்து சட்ட நிறுவனங்களின் நிர்வாகப் பொறுப்பு மீதான இத்தாலிய ஏற்பாட்டுக்கு ஏற்ப ஏனையவற்றுடன் சேர்த்து Saipem SpA-ஆல் ஏற்கப்பட்ட நிறுவனம், மேலாண்மை மற்றும் கட்டுப்பாட்டு மாதிரியின் ஒரு பொதுவான கட்டாயக் கொள்கையாகும்.

கூறப்பட்ட முறைக்காக நிறுவப்பட்ட இணக்கக் குழுவிற்கான உத்தரவாதியின் செயல்பாடுகளை Saipem SpA நியமிக்கிறது. இத்தாலியிலும் வெளிநாட்டிலும் ஒவ்வொரு நேரடி அல்லது மறைமுக துணை நிறுவனமும், உத்தரவாதியின் செயல்பாட்டை அதன் சொந்த இணக்கக் குழுவுக்கு அல்லது பிற அதற்கிணையான உறுப்புக்கு தகுதியான நிறுவன உறுப்பின் முறையான ஒப்பந்தத்தின் மூலம் ஒப்படைக்கிறது.

உத்தரவாதிக்குப் பின்வரும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது:

- கோட்பாடுகளை அமல்படுத்துவதையும் ஒப்புநோக்கு ஒழுங்குமுறாஇ ஆவணங்களை வெளியிடுவதையும் ஊக்குவித்தல்; உறுதிப்படுத்தப்பட்ட மீறல்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்காக, நிர்வாக அதிகாரி - தலைமை நிர்வாக அதிகாரிக்கு அறிக்கையளித்தல் நன்னடத்தை விதிகள் மற்றும் பயன்பாட்டிற்கு நிறுவனத்தின் முன்முயற்சிகள் பயனுள்ளதாக இருக்கும்;
- Saipem-ன் மேலாண்மை மற்றும் பணியாளர்களுக்கான குறிப்பிட்ட தகவல் தொடர்பு மற்றும் பயிற்சி திட்டங்களை ஊக்குவித்தல்;
- பொருத்தமான விசாரணைகளைத் தொடங்குவதன் மூலம் நடத்தைகளை மீறுவதற்கான அறிக்கைகளை விசாரித்தல்; நடத்தை மீறல்கள் குறித்த விசாரணை முறையாகக் கையாளப்படவில்லை அல்லது மீறலைப் புகாரளித்த நபருக்கு எதிராக வன்முறை நிகழப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டால், Saipem பணியாளர்களின் வேண்டுகோளின்படி நடவடிக்கை எடுப்பது;
- விசாரணைகளின் முடிவில் சாத்தியமான அபராதங்களை ஏற்றுக்கொள்வதற்கான தொடர்புடைய கட்டமைப்புகளை அறிவித்தல்; விசாரணைகளின் முடிவுகளையும் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்வது குறித்து தெரிவித்தல்.

மேலும் Saipem SpA உத்தரவாதியானவர் தணிக்கை மற்றும் அபாயக் குழுவுக்கும் சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் வாரியத்துக்கும் அதேபோல நிறுவனத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரிக்கும் சமர்ப்பிக்கிறார். இது Saipem SpA இயக்குநர் குழுவுக்கு அமல்படுத்துகை மற்றும் கோட்பாட்டைப் புதுப்பிப்பதற்கான

தேவை குறித்த ஓர் அரையாண்டு அறிக்கையை தெரிவிக்கும்.

அதன் பணிகளின் செயல்திறனுக்காக, Saipem SpA-ன் உத்தரவாதி "Saipem SpA-ன் 231வது இணக்கக் குழுவின் தொழில்நுட்ப செயலகத்திற்கான", தொழிற்முறை படிநிலை சார்புக்கான அமைப்பில் பங்குபெறுகிறார். துணைச் செயலாளர்களின் உத்தரவாதிகளிடமிருந்து, போதுமான அறிக்கை மற்றும் தகவல்தொடர்பு முறையைத் தொடங்குவதற்கும் பராமரிப்பதற்கும் தொழில்நுட்பச் செயலகமே பொறுப்பாகும்.

அறிக்கையிடல் முறையை எளிதாக்கும் பொருட்டு, செயல்முறையில் சுட்டிக்காட்டப்பட்ட குறிப்பிட்ட தகவல்தொடர்பு சேனல்களை Saipem அமைத்துள்ளது, " Saipem SpA மற்றும் இத்தாலி மற்றும் வெளிநாடுகளில் உள்ள அதன் துணை நிறுவனங்களால் பெறப்பட்ட அறிக்கைகள், பெயரிடப்படாது இருக்கும்", அத்துடன் அவை Saipem-ன் இன்ட்ராநெட் மற்றும் இணைய வலைத்தளங்களில் வெளியிடப்படும். இதனை அனைத்து Saipem பணியாளர்களும் வலைத்தளத்தின் அனைத்துப் பயனர்களும் அணுகலாம்.

அறிக்கைகளின் அறிவிப்பு முறையை ஊக்குவிக்க Saipem SpA தனது சொந்த "அர்ப்பணிக்கப்பட்ட சேனல்களை" அமைத்துள்ளது:

organismodivigilanza@saipem.com.

### 4.2.2. கோட்பாட்டை வளர்த்தெடுத்தல்

கோட்பாட்டைப் பற்றிய அறிவை வளர்க்கவும் அவற்றை நடைமுறைப்படுத்தலை ஏதுவாக ஆக்கும் பொருட்டும், Saipem SpA இன் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் மேலாண்மை, நெறிமுறை கோட்பாடுகளில் வகுத்தளிக்கப்பட்டுள்ள முதன்மையான கொள்கைகளைப் பற்றிய அறிவையும் அவற்றை நடைமுறைபடுத்தலையும் ஏதுவாக்கி வளர்த்தெடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். இந்தப் படியாக அவர்கள், இங்கே தெரிவிக்கப்பட்டுள்ள முதன்மையான கொள்கை கோட்பாடுகளைப் போற்றுகின்ற கலாசாரத்தை Saipem இற்குள் பரப்பிடும் நோக்கத்தையும் அதற்காக வாய்ப்புள்ள அனைத்து அறிவுசார் கருவிகளும் வழங்கப்படுதலையும் வளர்த்தெடுக்கிறார்கள்.

## 4.3. <u>நன்னடத்தை மதிப்பாய்வு</u>

கோட்பாட்டு மதிப்பாய்வு Saipem SpA இயக்குநர் குழுவால் அங்கீகரிக்கப்படுகிறது.

கொள்கைகள் மற்றும் உள்ளடக்கங்களைக் குறிப்பிடுவதன் மூலம் பங்குதாரர்களின் மதிப்பீட்டைக் கருத்தில் கொண்டு, அவர்களின் செயல்பாட்டுப் பங்களிப்பை ஊக்குவித்தல் மற்றும் ஏதேனும் குறைபாடு குறித்த அறிவிப்பையும் இந்தத் திட்டம் முன்வைக்கிறது.

## 4.4. <u>கோட்பாட்டின் ஒப்பந்த மதிப்பு</u>

கோட்பாட்டின் விதிகளுக்கு மதிப்பளிப்பது அனைத்து Saipem பணியாளர்களின் ஒப்பந்தக் கடமைகளின் இன்றியமையாத பகுதியாகும்.

கோட்பாட்டிலுள்ள கொள்கைகள் மற்றும் உள்ளடக்கங்களில் மீறலானது பணியாளர் உறவில் முதன்மைக் கடமை மீறலாக அல்லது ஒழுங்குமுறைக் குற்றமாக எடுத்துக் கொள்ளப்படும். பணியாளர் உறவினைப் பேணுவது தொடர்பான அனைத்து சட்ட விளைவுகளும் அதற்கான சேதங்களுக்கு இழப்பீடு தரச் செய்யும்.